ஸ்ரீ தந்வந்த்ராயே நம:

# வைத்திய சந்திரிகா

தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டல மாதப் பத்திரிகை

பிரமாதீச
வைகாசி

ஜூன்
1973



தொகுதி 35
பகுதி 6

Vol. 35
No 6

ஆசிரியர் & பிரசுரகர்த்தா

வைத்ய T. S. ஈச்வரன், L. I. M.

வருஷச் சந்தா
ரூ 5/-

Annual
Subscription
Rs 5/-

ஸ்வர்ணமாலினீ வஸந்தம் ... 97

பார்ச்வசூலம் ... 107

கார்யாலயம் : 27, சின்னக்கடைத் தெரு, தெப்பக்குளம், திருச்சி.

## வைத்யரத்னம் P. S. வாரியருடைய

# ஆர்ய வைத்நியசாலா

### கோட்டக்கல். (கேரள ராஜ்யம்)

Registered Trade Mark.

தலைமை ஆபீஸ் போன் : கோட்டக்கல் எக்ஸ்சேஞ்ஜ்
ஆபீஸ் - அட்மினிஸ்டிரேடர் - மானேஜர் தொடர்புடன் போன் நெ. 31

| | | |
|---|---|---|
| நர்ஸிங்ஹோம் | | போன் நெ. 44 |
| தலைமை வைத்யர் | | போன் நெ. 25 |
| மானேஜிங் டிரஸ்டி | (வீடு) | போன் நெ 27 |
| | (ஆபீஸ்) | போன் நெ 61 |
| மானேஜர் | (வீடு) | போன் நெ. 26 |

**சென்னை கிளை :**

No. 1, கிருஷ்ணமாசாரி ரோடு,
நுங்கம்பாக்கம், சென்னை 34. போன் எண் 811275

**மற்ற கிளைகள் :**

1. கோழிக்கோடு (போன் 2155)
2. பாலக்காடு (போன் 104)
3. பாலக்காடு ஸேல்ஸ் டிபோ (போன் 584)
4. ஆல்வாய்
5. ஈரோடு (போன் 172)
6. திரூர் (போன் 31)
7. எர்ணாகுளம (போன் 33026)
8. திருவனந்தபுரம் (போன் 3924)

மேலும் நூற்றுக்கு மேற்பட்ட அதிகாரம் பெற்ற
ஏஜண்டுகளும், டெபோக்களும்

சுத்தமானதும், உயர்தரமானதுமான ஆயுர்வேத மருந்துகளும், உயர்ந்த வைத்ய ஆலோசனைகளும் எமது தலைமை ஆபீஸிலும், கிளைகளிலும் கிடைக்கும் எமது தலைமை வைத்யரால் கடிதமூலமாக வைத்ய ஆலோசனைகள் அளிக்கப்படும். நவரைக்கிழி, பிழிச்சல் முதலிய விசேஷ சிகித்ஸைகள் தலைமை வைத்யர் மேற்பார்வையில் எமது கோட்டக்கல் **கோல்டன் ஜூபிலி நர்ஸிங்ஹோமில்** நடத்தப்பெறும்.

மற்ற விபரங்களுக்கு:—

**மானேஜிங் டிரஸ்டி.**
ஆர்ய வைத்யசாலை, கோட்டக்கல்.

# திருச்சி ஆயுர்வேதிக் யூனியன்

## பிரைவேட் லிமிடெட்

(ஸ்தாபிதம் 1939)

விற்பனே அண்டு ரிஜிஸ்டர்ட் ஆபீஸ்

31-A, சின்னகடைத் தெரு,

திருச்சிராப்பள்ளி-2.

போன் எண் : 4202

## சிறந்த ஆயுர்வேத மருந்துகளுக்கு முப்பத்திமூன்று ஆண்டுகளாக பிரஸித்தமான இடம்.

பிரஸவித்த மாதர்கட்கு:

**ஸௌபாக்கிய ரஸாயனம்**

ஜீர்ண சக்தி, ரத்தவிருத்தி அளிக்கும் சிறந்த லேஹியம்,

300 கிராம் பாட்டில் ரூ. 5.

**பயஸ்யா**

தாய்ப்பாலே வளர்க்கும் திவ்ய ரஸாயன லேஹியம்.

300 கிராம் பாட்டில் ரூ. 5-50

— தபால் செலவு தனி —

சாஸ்திரீய ரீதியில் தகுந்த நிபுணர்களின் மேற்பார்வையில் தயாரிக்கப்பெற்ற

மற்ற எல்லா ஆயுர்வேத மருந்துகளும்

இங்கு கிடைக்கும்.

வைத்தியர்களுக்கும் பொதுமக்களுக்கும்

— மிகவும் நம்பிக்கையான இடம் —

T. S. ஈச்வரன், L.I.M.

மானேஜிங் டைரெக்டர்.

FOR PURE MUSK, KASHMIR SAFFRON, GOROCHAN & INDIAN CRUDE DRUGS

WRITE TO

**M|s. Kalia Brothers (Regd.)**

**Wholesale Musk & Indian Drugs Merchants,**

JULLUNDUR CITY (PUNJAB)

**Gram: KALIA**

Phone: **Office - 3232**

**Resi. - 4343**

சுத்தமான கஸ்தூரி, காஷ்மீர் குங்குமப்பூ,

கோரோசனை மற்றும் மருந்து சரக்குகட்கு

அடியிற்கண்ட விலாசத்திற்கு எழுதவும்:

**கலியா பிரதர்ஸ் [ரிஜிஸ்டர்ட்]**

கஸ்தூரி மருந்து சரக்கு மொத்த வியாபாரி,

ஜல்லந்தர் ஸிடி (பஞ்சாப்).

தந்தி: **KALIA**

போன்: ஆபீஸ் – 3232

வீடு – 4343

தந்தி : " அம்ருதம் "   P, B. No. 1382.   போன் : 26006

# தி ஆர்ய வைத்திய பார்மஸி

## (கோயமுத்தூர்) லிமிடெட்

தலைமை ஆபீஸ் : 366, திருச்சி ரோடு, கோயமுத்தூர்-18.

THE ARYA VAIDYA PHARMACY (COIMBATORE) LTD.

AVP

**உண்மையான ஆயுர்வேத மருந்துகளுக்கும் சிகிச்சைகளுக்கும் சிறந்த இடம்**

— எங்களுடைய கிளைகள் : —

| | | | |
|---|---|---|---|
| 1. | 23-B, பூஸா ரோடு, புது டில்லி-5 | போன் : | 585687 |
| 2. | மொய்தீன் பள்ளி ரோடு, கள்ளிக்கோட்டை 1 | ,, | 2984 |
| 3. | கௌடியா மடத்தெரு, மதராஸ்-14 | ,, | 85752 |
| 4 | வளிஞ்ஞம்பலம், எர்ணாகுளம், கொச்சின்-16 | ,, | 32336 |
| 5. | பிள்ளையார் கோயில் ரோடு, கண்ணனூர்-1 | ,, | 92 |
| 6 | மார்க்கெட் ரோடு, பாலக்காடு-1 | ,, | 195 |
| 7. | கடைவீதி, பொன்னானி | ,, | 41 |
| 8. | ரௌண்ட் வெஸ்டு, திருச்சூர்-1. | ,, | 738 |
| 9. | கோர்ட் ரோடு, ஆலத்தூர் | ,, | 87 |
| 10 | மெயின் ரோடு, கஞ்சிக்கோடு | | |
| 11. | ரயில்வே ஜங்ஷனுக்கு எதிரில், கோயமுத்தூர்-18 | | 33758 |
| 12. | இந்திரா பில்டிங், கள்ளிக்கோட்டை-2 | ,, | 4891 |
| 13 | T. T. 384 K. டெலிச்சேரி ரோடு, கண்ணனூர்-2 | | 842 |
| 14. | No 263, 64. 11 வார்டு, மெயின் ரோடு, எடப்பாள் (பொன்னானி) | | 31 |
| 15. | ஹல்வா பஜார் ரோடு, கள்ளிக்கோட்டை-1 | | |

பாக்டரி :
கஞ்சிக்கோடு (கேரளா)
(போன் : 2)

நர்ஸிங் ஹோம் :
திருச்சி ரோடு, கோயமுத்தூர்-18
(போன் ; 22194)

மேலும் விபரங்களுக்கு விண்ணப்பம் செய்க :—

ஆர்ய வைத்தியன் P. V. ராம வாரியார்
பிரதம வைத்தியர் & மானேஜிங் டைரக்டர்

# வாரியர்

# க்ஷீரபலா 101

ஸர்வாங்க வாதம், பாரிச வாயு முதலிய எல்லாவித மான வாத நோய்களையும் குணப்படுத்தக்கூடிய மிகச் சிறந்த மருந்து. வாயுவினால் ஏற்படக்கூடிய மூச்சுப் பிடிப்பு, மார்பு வலி, விலாப்புறங்கள் வலி, முதுகு வலி, சந்துகள் தசை நார்களில் வலி, வீக்கம், கை கால் வலி முதலிய எல்லாவிதமான நோவுகளையும் நிச்சயமாகக் குணப்படுத்தும், மற்றும் நரம்புகள் சம்பந்தப்பட்ட விரல் நடுக்கம், நாக்குக் குளறல், கண்-காது கோளாறுகள், ஒருத்தலைவலி முதலிய கோளாறுகளையும் குணப்படுத்தும்.

ரத்த அழுத்தம் [பிளட் பிரஷர்] என்ற வியாதியை குணப்படுத்தவும், வராமல் தடுக்கவும் நிகரற்றது.

ஊமையடிகளுக்கு இதைவிட சிறந்த மருந்து கிடையாது.

பிரஸவித்திருக்கும் பெண்களுக்கும் வாயுவை சீராக்கி உடம்பை தேற்றும்.

வயோதிகர்கள் இதை தினசரி உபயோகித்துவந்தால் வாத ரோகங்களும் விருத்தாப்பியத்தினால் ஏற்படும் நரம்புத் தளர்ச்சியும், புலன்களின் சக்திக் குறைவும் ஏற்படாமல் ஆரோக்கியத்துடன் இருக்கலாம்.

விலை 25 ML. ரூ. 7-00 12 ML. ரூ. 3-75

ஆரிய வைத்தியர் கெ. எஸ். வாரியர் அவர்களின்

**அஷ்டாங்க ஆயுர்வேத சாலா,**

**சைனபஜார், தெப்பக்குளம் போஸ்ட், திருச்சி-2.**

PHONE : 5441 வீடு போன் : 6074

[1936-ல் நிறுவப்பட்டது].



ஸ்ரீ தந்வந்தரயே நம:

# வைத்திய சந்திரிகா

தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டலத்தின் மாதப் பத்திரிகை

| | | |
|---|---|---|
| தொகுதி 35 | பிரமாதீச வைகாசி | பகுதி 6 |
| Vol. 35 | 1973 ஜூன் | No. 6 |


श्री धन्वन्तरये नमः

## ஸ்வர்ணமாலினீவஸந்தம்

வைத்ய எஸ். வி. ராதாகிருஷ்ண சாஸ்திரீ, திருச்சி.

ஸ்வர்ணமாலினீவஸந்தம், ஸ்வர்ண வஸந்தமாலதீ, வஸந்த ராஜம், வஸந்த மாலதீ என்ற மாற்றுப்பெயர்களுடன் இந்த முறை பைஷஜ்யரத்னவளீ, தன்வந்தரி, ரஸாயன ஸங்கிரஹம், ரஸராஜ ஸுந்தரம், ரஸகௌமுதீ, ரஸபத்ததி, லகுவைத்ய சிந்தாமணி, வைத்யதர்பணம், ஸித்தபேஷஜமணிமாலா, வைத்ய விலாஸம், யோகரத்னகரம், நிகண்டுரத்னகரம், பிருஹத்யோக தரங்கிணீ, ரஸகாமதேனு முதலிய பல நூல்களிலும் இடம் பெற்றிருக்கிறது ஜ்வராதிகாரத்திலும் ரஸாயனதிகாரத்திலும் இதன் பெருமையை வைத்யர்கள் நன்கு அறிவார்கள். இதே பெயரில், சேர்க்கப்படும் மருந்துச் சரக்குகளில் வித்யாஸமுள்ள வேறு சில முறைகளும் உண்டு. அதைப் பின் விவரிப்போம்.

செய்முறை :—தங்கபஸ்மம் அல்லது ரேக்கு 10 கிராம், முத்து பஸ்மம் அல்லது பிஷ்டி 20 கிராம், சுத்தலிங்கம் 30 கிராம், மிளகு 40 கிராம், கர்பரம் 80 கிராம் இவைகளைக் கல்வத்திலிட்டு அரைத்து ஒன்ருகக் கலந்தவுடன் வெண்ணெய் சேர்த்துக்குழப்பி அரைத்து, வெண்ணெய்யின் நெய் நீங்கும் வரை எலுமிச்சம்பழச் சாறு விட்டரைத்து 2 குந்துமணியளவு மாத்திரை செய்து கொள்ளவும்

தேனும் திப்பிலித் தூளும் அனுபானமாகக் கலந்து சாப்பிடவும். ஜீர்ணஜ்வரம் ஜீர்ண விஷமஜ்வரம் காஸச்வாஸங்கள் இவைகளில் நல்லது. அக்னிமந்தத்தைப் போக்கிப் பசியைத் தூண்டும்.

இதுதான் நூல்களில் காணும் விவரணம்

கர்பரம் என்பது சுருள் துத்தம் என்று தமிழ் நாட்டில் உபயோகப்படுகின்றது. பால் துத்தம்தான் கர்பரம் என்னும் சிலர் கூறுவர். கர்பரம் இந்த முறையிலும், இந்த முறையிலேயே தங்கத்தையும் முத்தையும் நீக்கித் தயாரிக்கப்படும் மாலினீவஸந்தத்திலும்தான் முக்யமாக உபயோகப்படுகின்றது. பிராசீன கிரந்தங்களில் வேறு முறைகளில் இதை அதிகமாக உபயோகிக்கக் காணோம். நவீன ரஸக்ரந்தங்களிலும் யூனானி முறைகளிலும் இதன் உபயோகம் காணப்படுகிறது.

கர்பரத்திற்கு ரஸகம், நேத்ரரோகாரி, ரீதிகிருத், தாம்ராஞ்சகம், யசததாது என்ற மாற்றுப் பெயர்கள் உண்டு. யூனானியிலும் இதற்கு ஸங்க் பஸரீ (பஸரீ - கண்ணிற்கு உதவும் - ஸங்க் கல்) என்றும் கபரியர என்றும் தூதியா கிர்மானி என்றும் கூறப்படுகின்றது. ஈரானிலிருந்து வரும் சரக்கு இது. அதனாலேயே கிர்மானி தூதியா (கிர்மான் தேசத்திலிருந்து வரும் துத்தம்) எனப் பெயர். தூதியா கிர்மானியைப் பற்றிய விவரணத்தில் பாகற் காயில் காணுவது போல நீண்ட முண்டுகளும் பள்ளமுமுள்ள நாவற்பழ நிறமுள்ள கல் எனக் கூறப்படுகின்றது. நமது ரஸக்கிரந்தங்களில் விவரிக்கப்படும் தர்துரம் (படல் படலாக உள்ளது) காரவேல்லகம் (பாகற்காய் உருவுள்ளது) என்ற இரு வகைகளில் காரவேல்லகம் என்ற வகையைத் தூதியா கிர்மானி எனக் கொள்ளலாம். ஸங்க்பஸரி என்பது தர்துரம் எனக் கொள்ளலாம். ஸங்க்பஸர் என்பது வெளுத்த காகித நிறத்தில் பொரபொரப்புடன் காணும் கல்லாகும். இவ்விரண்டிலும் உயர்ந்த ரகம் தற்போது நம் நாட்டில் கிடைப்பது அரிது. ஸங்க்பஸரின் மட்டரகம் தற்போது கிடைக்கின்றது,

ரீதிகிருத்-தாம்ரரஞ்சகம், யசததாது என்ற மற்ற பெயர்களைக் கொண்டு அதன் உற்பத்தி ஸ்தலத்தையும் ரஸாயனச் சேர்க்கையையும் அறியமுடியும். இது யசதமென்ற துத்து நாகத்தின் மூலப்பொருள், (துத்தத்திலிருந்து எடுக்கப்படும் காரீயம் போன்ற லோஹம் என்பதே துத்துநாகம் என்பதன் பொருள். இதையே ரஸகாமதேனுவிலும் ஆயுர்வேதப்ரகாசத்திலும் ஸீஸகாகாரஸம்ஞகம், வங்கஸத்ருசம் என்பதால் குறிப்பிடுகின்றனர். காரீயத்திற்கும் துத்தநாகத்திற்கும் அமைப்பிலுள்ள

ஒற்றுமையே இந்த வியவஹாரத்திற்குக் காரணம். காரீயம் துத்த நாகம் வெள்ளி இவை அனேகமாக ஒரே இடத்தில் கிடைக்கும் மூலப்பொருள்களிலிருந்துபி ரித்தெடுக்கப்படுகின்றன. காரியத்தின் மூலக்கனிப்பொருள் Galena, Cerossiteம், துத்தநாகத்திற்கு Sphaleriteம், வெள்ளிக்கு Argentiteம் ஆகும். வெள்ளியும் காரீயமும் எடுக்கப்படும் கனிப்பொருள் கருநிறத்தில் ஸுர்மா போன்றிருக்கும். துத்தநாகத்தின் கனிப்பொருள் சிறிது மஞ்சள் கலந்த கருப்புடனிருக்கும். பர்மாவில் இந்தச் சுரங்கங்கள் மிகவுண்டு.

காரீயம் ஈயம் போன்ற லோஹ சத்து கலந்த சுரங்க மண்களிலிருந்தும் முழுவதும் அந்த அந்த லோஹசத்துகள் பிரிக்கப்படாமல் தங்கி ஆங்காங்கு ஒதுங்கியிருக்கும் மூலப்பொரு (ore) ளேயே இம்மாதிரி ரஸகம் முதலிய வஸ்துக்களாகக் கண்டெடுத்திருக்கின்றனர். அல்லது ரஸகம் என்ற துத்தநாக மண்ணிலிருந்தும் துத்தநாகத்தைப் பிரித்தெடுக்க வழி தெரியாத முன்னாளில் கர்பரம் அப்படியே உபயோகிக்கப்பட்டு வந்தது எனவும் கொள்ள இடமிருக்கிறது ருத்ரயாமளத்தில் பித்தளை தயாரிக்கும் பிரகரணத்தில்

> தாம்ர-ஜாஸத்வஸம்யோகே நாரீதாதுஸ்து ஜாயதே
> சுல்ப-கர்பரஸம்யோகே ஜாய்தே பித்தளம் சுபம்

எனக்காணப்படுகிறது. துத்தநாக மண்ணையும் தாம்ரத்தையும் சேர்த்து உருக்கும் போது பித்தளை உண்டாயிருக்கிறது. துத்த நாகத்தைத் தனித்துப் பிரித்தபின் தாம்மரத்துடன் சேர்க்கப்படவில்லை ஆக இந்த விவரணங்களைக்கொண்டு கர்பரத்தில் சேர்ந்துள்ள பொருள்களின் பொதுவான அறிவு ஏற்படலாம்

கர்பரம் என்ற பொருள் பால் துத்தம் – (கிர்மானீ தூதியா) அல்லது ஸங்க் பஸர் என்பதே என்று சிலர் நிர்ணயிக்கின்றனர். தமிழ் நாட்டில் சுருள் துத்தம் தான் கர்பரம் என்று பழக்கத்திலுள்ளது திரவ்யஸந்தேகம் உள்ள இந்த இடத்தில் சிலர் யசத (துத்தநாக) பஸ்மத்தையே கர்பரத்திற்குப் பதிலாக உபயோகிக்கின்றனர். கர்பரத்திலிருந்து ஸத்வமாகப் பிரித்தெடுக்கப்படும் லோகமான யசதத்தைபோடுவதால் கர்பரத்தைப் போடுவதன் லாபம் கிட்டுமென்பது அவர்களது யுக்தி. இன்னும் சிலர் கர்பரம் என்ற சுரங்கமண்ணில் துத்தநாகத்துடன் காரீயமும் வெள்ளியும் உற்பத்தியாகும் மண்ணும் கலந்திருக்குமானதால், தனி யசதபஸ்மத்தைச் சேர்ப்பதைவிட காரீய - பஸ்மம் துத்தநாக பஸ்மம், வெள்ளி பஸ்மம் இம்மூன்றையுமே சேர்ப்பதுதான் உசிதமெனக் கூறுபவரும் உண்டு. கர்பரஸ்தானத்தில் உபயோகிக்கப்படுவதற்காக காரீயம் 2 பங்கு, துந்தநாகம் ஒரு

பங்கு, வெள்ளி அரைப்பங்கு இம் மூன்றையும் சேர்த்து உருக்கி வெட்டையாக்கிக் கற்ருழைச் சாற்றில் அரைத்துப் புடமிட்டுப் பஸ்மமாக்கிக் கொள்வதும் வழக்கத்திலிருக்கிறது.

பால்துத்தத்தையே உபயோகிப்பவர்களிலும் அதை நன்கு சூர்ணம் செய்து மண் அல்லது பீங்கான் பாத்திரத்திலிட்டு பாத்திரம் நிறைய கோமூத்திரம் விட்டு தினமும் கோமூத்திரத்தை மாற்றி 7 நாள் பாவனை செய்து 8வது நாள் வென்னீர்விட்டலம்பிக் காயவைத்து எடுத்துக் கொள்பவரும் உண்டு. அவ்விதம் சுத்தி செய்ததைச் சம அளவு ரஸம் சேர்த்தரைத்துக் குப்பியிலிட்டு வாலுகா யந்திரத்தில் ஒரு நாள் எரித்தெடுத்த பஸ்மத்தையே சேர்க்க வேண்டுமென்று கூறுபவரும் உண்டு.

ஆக கர்பரம் என்பதற்கு, சுருள்துத்தம், பால்துத்தம், சுத்த பால்துத்தம், பால்துத்த பஸ்மம், துத்தநாக பஸ்மம், யசத-ஸீஸ-ரஜதபஸ்மம் என்று ஆறுவிதப் பொருள்கள் உபயோகித்து வருகின்றனர். எல்லாவற்றிற்கும் யுக்தியும் அனுபவமுமுண்டு. ஆனல் அனுபவத்தில் குணம் ஒருதரப் பட்டதாக இருக்கும் என்று சொல்வதற்கில்லை.

தங்கத்தை பஸ்மமாக்கியோ பஸ்மமாக்காமல் ரேக்காகத் தயாரித்த தங்கத்தையோ சேர்ப்பது வழக்கம் அவ்விதமே முத்தை பஸ்மமாக்கியோ அல்லது முத்தைத் தூளாக்கி பன்னீர் விட்டு மைபோல் அரைத்தெடுத்த பிஷ்டியையோ சேர்ப்பதும் வழக்கம்.

மிளகு என்ருலே இங்கு வெள்ளை மிளகு தான் சேர்க்க வேண்டுமென்பர் சிலர். தோல்நீக்கிய மிளகே வெண்மிளகாகக் கிடைப்பதால், தோல் நீக்கித்தான் சேர்க்கவேண்டுமென்பதற்கு வேறு ஆதாரமில்லாததால் கருப்புத் தோலுள்ள முழுமிளகையே உபயோகிப்பது நல்லதெனத் தோன்றுகிறது.

இந்த முறையைப் போல வெண்ணெய் சேர்த்துப் பிறகு வெண்ணெய்யிலுள்ள பிசுபிசுப்பு நீங்கும் வரை எலுமிச்சம் பழச்சாறு சேர்த்தரைக்க வேண்டிய முறைகள் பல உள்ளன. இங்கு செய்முறையில் பொதுவாக ஏற்படும் சந்தேகங்கள் பின் வருமாறு:- சேர்க்க வேண்டிய வெண்ணெய் பாலிலிருந்து எடுத்ததா ? தயிரிலிருந்து எடுத்ததா ? இதன் அளவு எவ்வளவு ? எலுமிச்சம்பழச்சாறு எவ்வளவில் சேர்ப்பது? எத்தனை நாள் அரைப்பது? வெண்ணெய்க்கும் எலுமிச்சம்பழச்சாற்றுக்கும் அளவு நூல்களில் காணப்படவில்லை பாலிலிருந்து கடைந்து எடுத்த வெண்ணெய்க்கும் தயிரிலிருந்து எடுத்த வெண்ணெய்க்கும் குணத்தில் மாறுபாடு உண்டு.

தயிரிலெடுத்த வெண்ணெயில் புளிப்பு காரணமாக நெய்ப்பு (ஸ்நிக்தகுணம்) குறைவு. வாத ஹரகுணம் மிகுதி. பாலில் எடுத்ததில் புளிப்பின்மை காரணமாக நெய்ப்பு மிகுதியாயும் மதுரரஸத்தாலாகக் கூடிய ரத்தபித்த ப்ரஸாதன சக்தி கூடியும் உள்ளது. க்ஷய காஸாதிகளில் நிலைகளுக்கேற்ப இரண்டிற்கும் சக்தி உண்டு. புளிக்காத தயிரில் எடுத்த வெண்ணெய்யும் (ஹய்யங்கவீனம்) பாலில் எடுத்த வெண்ணெய்யும் சேர்க்கத் தகுந்தவைதான் எனத் தோன்றுகிறது.

வெண்ணெய்யும் எலுமிச்சம்பழச்சாறும் கீழ்கண்ட யுக்தியில் சேர்க்கப்படுவது பெரியோர்களின் ஸம்பிரதாயம். வெண்ணெயின் பிசுபிசுப்பு அகலும்வரை எலுமிச்சம்பழச்சாறு; எலுமிச்சம் பழச்சாற்றின் புளிப்புத் தூக்கிக் காட்டாது மதுரமாக இருக்குமளவிற்கு வெண்ணெய். மருந்தில் புளிப்பும் நெய்ப்பும் காணக் கூடாது. வெண்ணெய்யின் நெய்ப்பைப் பழச்சாறும் பழச்சாற்றின் புளிப்பை வெண்ணெய்யும் அகற்றி அமிருதம் போன்று தயாராக வேண்டும் என்பதையே கருத்தில் கொள்வது வழக்கம்.

இதை மனதிற்கொண்டு மருந்து தயாரிக்கும்போது தங்கம் ஒரு தோலா, முத்து இரண்டு தோலா என்ற அளவில் எடுத்துக் கொண்டால் மொத்தச் சரக்குகள் 18 தோலாவாகும். அதற்கு $\frac{2}{3}$ அளவு சுமார் 12 தோலா வெண்ணெய் சேர்த்துப் பஸ்மம் தனியே தெரியாதபடி குழப்பிக்கொண்டு 20-25 நாட்கள்வரை 80 அவுன்ஸ்வரை பழச்சாறு விட்டரைக்கலாம். வெண்ணெய்யின் அளவைக் குறைத்தால் பழச்சாற்றின் அளவும் அரைப்பின் கால அளவும் குறையுமெனினும் மருந்தின் வீர்யம் அதிகமாக முன் சொன்ன அளவிற்குக் குறைப்பது உசிதமல்ல. சில நூல்களில் கலாம்சம் (1/16) வெண்ணெய் சேர்க்குமாறு காணப்படுகின்றது. சிலர் கால் பங்கு வரை சேர்ப்பதும் உண்டு. அப்போது பழச்சாறும் குறையும்.

## உபயோக முறை

அளவு: 1-2 குந்துமணி எடை - காலை மாலை திப்பிலி சூர்ணம் 4 யவ அளவு சேர்த்துத் தேனுடன் சாப்பிட்டு மேல் காய்ச்சிய பசுவின் பால் சாப்பிடலாம். அல்லது ஸிதோபலாதி சூர்ணம் வீசம் தோலா சேர்த்தும் சாப்பிடலாம். ஜீர்ண ஜ்வரம், ஜீர்ண காஸச்வாஸம், க்ஷயரோகம் இவைகளில் சியவனப்ராசாவலேஹம், பாவிதபிப்பலீ முதலியவைகளுடனும், தாதுக்ஷீணம் பிரமேஹம் பிரதரம். பஹுமூத்ரம், ஸோமரோகம் முதலியவைகளில் சிலாஜத்துவுடனும் அக்னிமந்தத்தில் வறுத்த ஜீரகத்தூள் தேனுடனும் சாப்பிடலாம்

அப்ரகபஸ்மம் 2 யவம், பிரவாளபிஷ்டி 2 யவம், சிருங்கபஸ்மம், 4-8 யவம், குடூசீஸத்வம் 10 யவம் ஸிதோபலாதி சூர்ணம் 10-15 யவம் சேர்த்து தேனில் குழைத்து சாப்பிட்டு மேல் பால் சாப்பிட நல்ல குணம் தரும். திப்பிலி சேர்த்துக் காய்ச்சிய பாலே அனுபானமாகக் கொள்வது நல்லது. பித்த பிரகிருதியாயுள்ளவர் ஜீரகத்தூளுடன் சர்க்கரை அல்லது வெல்லம் சேர்த்தும், நெல்லிக்காய் முரப்பாவுடனும் சாப்பிடலாம். ஜ்வரமில்லாமல் ஸ்வப்னஸ்கலிதம் அதிகமாகி சோஷமிருந்தால் தேன், நெய், சர்க்கரை கலந்து சாப்பிடலாம்.

ஸ்திரீகளுடைய ரத்தபிரதரத்தில் அரிசி கழுவிய ஜலத்துடன் உபயோகிப்பது நல்லது. பித்தத்தில் எரிச்சல் மிகுந்திருந்தால் குடூசீஸத்வத்துடன் கொடுக்கலாம்.

கர்ப்பிணிகளுக்கும் சிசுக்களுக்கும் பாதி அளவில் தரலாம்.

இது ஒரு சிறந்த ரஸாயனமாகும். நாட்பட்ட ஜ்வரம் ஸப்த தாதுகத ஜ்வரம், ராஜயக்ஷ்மா, ரோகம் தீர்ந்த பிறகும் பலவீனம், ஸ்திரீகளின் வெள்ளை - ரத்தபிரதரம், பாண்டு, கிரஹணீ, அக்னிமந்தம், கண்டமாலே, அந்த்ரக்ஷயம், புப்புஸகலாசோதம், பால சோஷம் இவைகளில் நல்ல குணம் தரவல்லது. ஜடராக்னியையும் தாத்வக்னியையும் சீர்படுத்தி உணவையும் தாதுக்களையும் சரியாக பாகமடையச் செய்கின்றது. இந்த பரிபாகத்தில் ஏற்படும் சீர்கேட்டால் நோய்கள் உண்டாவதைத் தடுக்கின்றது சரீரத்திற்குப் பலமும் நிறமும் மூளைக்குக் கூர்மையும் பலமும் அளிக்கிறது. எல்லா நோய்களிலும், எல்லா நாட்களிலும் யாருக்கும் கொடுக்கக்கூடியது. சரீரத்தின் ஒவ்வோர் அங்கத்திற்கும் பலம் தருகிறது. இதனால் கிடைக்கக்கூடிய பலம் ஸ்திரமாக நிற்கின்றது

ராஜயக்ஷ்மாவின் ஆரம்ப நிலையில் இரவில் ஜ்வரம், வரட்டு இருமல், காலை வியர்த்து ஜ்வரம் இறங்குதல், ரஸரக்தாதி தாதுக்கள் கிரமமாகக் குறைந்து சோஷித்தல், பலக்குறைவு இவை இருக்கும் பேரது வஸந்தமாலதீ, பிரவாளபஸ்மம், குடூசீஸத்வம் சேர்த்துக் கொடுக்க நல்ல பலன் தருகிறது. சரீர பலநாசத்தை உடன் நிறுத்தி வியாதி அதிகமாகாமல் உடன் பாதுகாக்கிறது.

மலேரியா ஜ்வரத்தில் குவைனு மாதிரி மருந்துகள் கொடுத்தும் ஜ்வரம் நிற்காமலும் மண்ணீரல் பருத்தும் சரீரம் வெளுத்தும், காணும்போது இதனால் ரோகப்ரதிகாரகசக்தி அதிகமாகி உடல் தென்பும் அதிகமாகி கிரமமாக உபத்ரவங்கள் குறைகின்றன.

ஸ்திரீகளுக்கு மாதவிடாய் காலத்திலும் பிரஸவ காலத்திலும் கர்ப்பஸ்ராவ காலத்திலும் அதிகமாக ரத்தம் வெளியாகி பலம்

குறைந்து காந்தி குன்றி அக்னிமந்தம் உடல்வலி கைகால் கண்களில் எரிவு உத்ஸாகமின்மை, சிடுசிடுப்பு அதிகோபம் சரீரம் மஞ்சளாகுதல் போன்ற லக்ஷணங்கள் காணும்போது மண்டூரம் அல்லது லோஹபஸ்மத்துடன் இதைக் கொடுக்க நல்ல குணம் தருகிறது.

ஸ்திரீகளுக்கு ஏற்படும் வெள்ளை வெட்டையிலும், புருஷர்களுக்கு ஏற்படும் தாது நஷ்டம் வெட்டை நோய்களிலும் இதன் உபயோகம் நல்ல பலன் தருகின்றது.

ஹிருதயத்தின் பலம் குன்றியோ படபடப்பு மேலீட்டாலோ–சிறிதளவு தேக ஆயாஸத்திலும் ஹிருதயம் படபடப்புடன் திணறும்போது ஹிருதயத்தின் படபடப்பையும் திணறலையும் குறைத்து ஹிருதயத்திற்குப் பலமளிக்கின்றது.

ஸ்வர்ணமாலிகா வஸந்தம் என்ற பெயரில் வேறு மூன்று யோகங்கள் காணப்படுகின்றன.

1. வைத்ய சிந்தாமணியிலுள்ளது.

தங்கபஸ்மம் அல்லது ரேக்கு; முத்துபிஷ்டி அல்லது பஸ்மம், லிங்கம், வெள்ளி பஸ்மம், சுத்த கர்பரம் அல்லது கர்ப்பர பஸ்மம், லிங்கம், கந்தகம், ரஸம், நீல பஸ்மம், ஸ்வர்ணமாக்ஷிக பஸ்மம், ரஜதமாக்ஷிக பஸ்மம், அப்ரக பஸ்மம், தாம்ர பஸ்மம், வத்ஸநாபி, வைக்ராந்த பஸ்மம், அயஸ் பஸ்மம் இவைகளை வகைக்குச் சம எடை முறைப்படி கல்வத்திலிட்டு சேர்த்து தாமரைப்பூ (தீநீர் அல்லது சாறு) இலவந்துளிர் சாறு, கருப்பஞ்சாறு, பசுவின் பால், வாழைக்கிழங்கின் சாறு, முலைப்பால், அதிமதுரகஷாயம், கோரைக்கிழங்கின் கஷாயம், வெட்டிவேர் கஷாயம், விலாமிச்சை வேர் கஷாயம் இவைகளில் ஒருவாரம் நன்கு அரைத்து பின்பு பச்சைக்கர்பூர ஜலத்தில் ஒரு பாவனை செய்து 2 யவ அளவில் மாத்திரைசெய்து ரோகத்திற்கேற்ற அனுபானத்துடன் கொடுக்க பித்தப்பிரமேஹம், பித்தஜ்வரம், அதிக ஸ்தூலம், அதிகமெலிவு, தலைசுற்றல், எரிச்சல், நீர்ச்சுருக்கு அடைப்பு, பிரமேஹம் நபும்ஸகத் தன்மை, சுக்ரதோஷம் இவைகளில் கொடுக்க நல்லது.

இது அதிகமாகப் பழக்கத்திலில்லை.

2. ரஸபாரிஜாதத்தில் உள்ளது.

தங்கம் 10 கிராம், முத்து 20 கிராம், லிங்கம் 10 கிராம் மிளகு 10 கிராம் கர்பர பஸ்மம் 20 கிராம் இவைகளை 10 கிராம் வெண்ணெய் சேர்த்து அரைத்து எலுமிச்சம் பழச்சாறு விட்டு நெய்ப்பு போகும்வரை அரைத்து 1-3 யவ அளவு தேனுடன் சாப்பிட ராஜயக்ஷ்மா, ஜீர்ண ஜ்வரம் மண்ணீரல் பெருக்கம், பாண்டு, பிரமேஹம், அதிஸாரம் இவைகளை நீக்கும்.

3. ரஸாயன ஸங்கிரஹத்திலுள்ளது.

தங்கம் 30 கிராம், பவழ பஸ்மம் 30 கிராம், லிங்கம் 50 கிராம், மிளகு 80 கிராம், கஸ்தூரி 10 கிராம், கோரோசனை 10 கிராம் நாக (காரீய) பஸ்மம் 20 கிராம், வங்க பஸ்மம் 30 கிராம், அப்ரக பஸ்மம் 30 கிராம், குங்குமப்பூ 10 கிராம் முத்து 40 கிராம், திப்பிலி 10 கிராம், கர்பர பஸ்மம் 110 கிராம் இவைகளை 30 கிராம் வெண்ணெய் சேர்த்துக் குழப்பி எலுமிச்சம் பழச்சாற்றுடன் அரைத்து நெய்ப்பு நீங்கியதும் 2 குந்துமணி யளவு தேனும் திப்பிலித் தூளும் சேர்த்துச் சாப்பிட ஜீர்ண ஜ்வரம், ரத்தப் பிரமேஹம், லிங்க சூலம், பாண்டு, காமலா, சூலம் ச்வாஸகாஸம், மூத்திர கிருச்சிரம், மூத்ராச்மரீ, அதிஸாரம், கிரஹணீ, அர்சஸ், வீர்ய நஷ்டம், பாலகிரஹரோகங்கள், கர்ப் பிணீ ரோகங்கள், யோனி சூலம், பிரதரம்; அதிஸாரம், ஸூதிகா ரோகம், ஸோம ரோகம் இவைகளில் மிக நல்லது

நல்ல பலகாரி ரஸாயனமாகும். அமுக்காரக் கிழங்கு சூர்ணத் துடனும் இதை ஸேவிக்கலாம். பித்தத்தால் ஏற்படும் நோய் களில் இதைக் கையாள நல்ல குணம் கிடைக்கும்.

இந்த மூன்று யோகங்களில் முதல்யோகம் அதிகமாகப் பழக்கத்திலில்லாதது. இரண்டாவது யோகத்திற்கும் சென்ற இதழில் வெளியானதற்கும் தனித்தனி திரவ்ய அளவில் உள்ள வேறுபாட்டைத் தவிர வேறு வித்யாஸமில்லை. மூன்ருவது யோகத்தில் குங்குமப்பூ, கஸ்தூரி நாக – அப்ரக – வங்க பஸ்மங் களின் சேர்க்கை இம்மருந்தின் விசேஷ நலனைத் தரவல்லதாக இருக்கிறது.

## மாலினீ வஸந்தம்

ஸ்வர்ணமாலிகா வஸந்தத்தில் தங்கத்தையும் முத்துவையும் தவிர மற்ற சரக்குகளை மட்டும் சேர்த்துத் தயாரித்ததை மாலினீ வஸந்தம் வஸந்தமாலதீ என்ற பெயர்களில் குறிப்பிடுவர்.

செய்முறை ;— சுத்தலிங்கம் 30 கிராம், மிளகு 40 கிராம், கர்பரம் 80 கிராம் இவைகளைக் கல்வத்திலிட்டு நன்கரைத்து 10 கிராம் வெண்ணெய் சேர்த்தரைத்தபின் எலுமிச்சம்பழச்சாறு விட்டு வெண்ணெய்யின் நெய்ப்பு நீங்கும் வரை அரைத்து மாத்திரை செய்து கொள்ளவும்.

ஸ்வர்ணமாலிகா வஸந்தம் கொடுக்குமிடங்களிலும் இதைக் கொடுக்கலாம். சற்று சக்தி குறைந்து காணும்.

வேறு முறை :— ரஸ முக்தாவளியில் தாது க்ஷயாதிகாரத்தி லுள்ளது. கர்பரம், மிளகு ரஸம், கந்தகம் வகைக்குச் சம எடை

எனக் காணப்படுகிறது துத்தநாக மண்ணையும், தாம்ரத்தையும், ரஸத்தையும், கந்தகத்தையும் கஜ்ஜலி செய்து மிளகு கர்பரங்களைச் சேர்த்து வெண்ணெயுடன் அரைத்து பிறகு எலுமிச்சம்பழச்சாறு சேர்த்து அரைத்து 3-4 யவ அளவு மாத்திரை செய்துகொள்ளவும். திப்பிலித்தூளும் தேனும் அனுபானம்.

தாதுக்ஷயம், அக்னி மந்தம், விஷமஜ்வரம்' அதிஸாரம், மூலம், பிரதரம், கிரஹணீ, ரத்தபித்தம் இவைகளில் நல்லது.

வேறுமுறை: பஸவ ராஜீயம், நிகண்டு ரத்னாகரம், ரஸ கல்ப லதா, டோடரானந்தம் முதலிய நூல்களில் ஜ்வர முராரி என்றும் ரஸாவதாரத்தில் ரஸராஜம் என்றும் ரஸப்ரதீபத்தில் ஜீர்ணஜ்வரஹரம் என்றும் ரஸகாமதேனுவில் நவஜ்வராரி என்றும் ரஸபாரிஜாதத்தில் வியாதிகஜகேஸரி என்றும் வேறு பெயர்களுண்டு. வைத்ய சிந்தாமணி, யோக ரத்னாகரம் முதலிய நூல்களில் வஸந்த மாலதி என்று பெயர்.

மிளகு 1 பங்கு, கர்பரம் 2 பங்கு இவைகளை அரைத்து வெண்ணெயும் எலுமிச்சம்பழச்சாறும் சேர்த்து முன்போல் அரைத்து 6 யவ அளவு மாத்திரை செய்து சாப்பிடவும். பசுவின் பால், திப்பிலித்தூள், தேன் இவை அனுபானம். ஜ்வரம், நாட்பட்ட ஜ்வரம், விஷமஜ்வரம், தாதுகதஜ்வரம், ரத்தாதிஸாரம், மூலம், பிரதரம், நேத்ர ரோகங்கள், சகல ரத்தஜ பித்தஜ ரோகங்கள் நீங்கும்.

இம்மூன்று முறைகளும் சற்றேறக்குறைய ஒரே குண-முள்ளவை. ஸ்வர்ணமாலிகா வஸந்தத்திற்கு அடுத்தபடியாக இவை உபயோகிக்கத்தக்கவை. நல்ல சீத வீர்யயான ரஸாயன மாகும். கப பித்தப் பிரகோபத்தில் உபயோகிக்கத் தக்கது. நாட்பட்ட முறை ஜ்வரம், நாட்பட்ட ஜ்வரம், ரஸம், ரக்தம் முதலிய தாதுக்களில் லீனமான ஜ்வரம் இவைகளில் நல்லது.

மலேரியா ஜ்வரத்தில் க்வினைன் முதலிய ஜ்வரஹர மருந்து களின் அதிக உபயோகத்தால் சரீரம் வெளுத்து பலம் குன்றி தலை முதலிய இடங்களில் எரிவும், நாவரட்சியும், அதிக வியர்வையும், இரவில் களைப்பு மிகுதியும் பசியின்மையும், ரத்தக் குறைவும் ஏற்படும்போது இதன் உபயோகம் சாலச்சிறந்தது. ஜ்வரம், உட்காங்கை இவைகளையும் குறைக்கின்றது.

பிரமேஹம், ரத்தப்பிரதரம், ரந்த பித்தம், அர்சஸ், ச்வாஸம் நாட்பட்ட அதிஸாரம், ராஜயக்ஷ்மா இவைகளில் வியாதியின் கடுமையைக் குறைக்கவும் பலவீர்ய விருத்திக்கும் சிறந்தது.

தொடர்ந்து சில நாட்கள் ஜ்வரம் அடிக்கும்போது, ஜ்வரம் மேலெழுந்தவாரியாகச் சமனமடைந்தது போல காணப்பட்டாலும் ஜ்வர காரணமான தோஷ தூஷ்ய ஸம்மூர்ச்சனை நன்கு பிரியா விடில் ஜ்வரம் ஆமரஸத்திலிருந்து ரஸ ரக்தாதி தாதுக்களில் பரவித் தங்கிவிடுகின்றது நோயாளி மேலும் துர்பலனாகி காந்தி, பசி, ஜீர்ண சக்தி குன்றிவிடுகின்றது. மாலினீ வஸந்தம் ரஸ ரக்தங்களை ஆசிரயித்த ஜ்வரத்தை உட்காங்கையைக் குறைத்து ரத்த விருத்தி செய்து ஆரோக்யத்தை அளிக்கின்றது. லோஹாஸவம், அமிருதாரிஷ்டம், குடூசி ஸத்வம் போன்ற அனுபானங்கள் சேர்த்துக்கொள்ளலாம்.

பாலர்களுக்கு உட்காங்கையால் உடல் மெலிந்து மார்புக்கூடு பின்னி, வயிறு ஊதி துர்பலம் ஏற்படும் நிலையில் இதன் உபயோகம் மிகவும் குணம் தருகின்றது. அடிக்கடி கபத் தொந்தரவு ஏற்படுதல், பசியின்மை, ஆவலுடன் உணவு ஏற்காமை, மந்தஜ்வரம், இளைப்பு, பலவீனம், எலும்புகளின் சக்தி குறைவால் ஏற்படும் வளைவு, சரீர பாரம் கூட தாங்காமல் எலும்புகள் வளைதல், மூட்டுக்கள் பருத்திருத்தல் போன்ற நிலைகளில் மாலினீ வஸந்தம் நல்ல குணம் தருகிறது. எலும்புகள் இதனால் வலிவுபெற்று நரம்புகள் திடமாகி குழந்தைகள் நன்கு விளையாட ஆரம்பிக்கின்றன.

வாத கப தோஷத்தால் ஏற்படும் அக்னி மந்தம் காரணமாக ஜீர்ணமாகாமல் மலம் இளகி வெளியாகும். லேசாக ஜ்வரம், உடல்வலி, சிலநாள் மலக்கட்டு, சிலநாள் மலமிளகிப்போதல், அருசி, புளித்த ஏப்பம் இவைகள் ஏற்படும்போதும் மாலினீ வஸந்தம் நல்ல குணம் தருகின்றது.

கர்ப்பிணிகளுக்கு ஏற்படும் ஜ்வரங்களில் நிர்பயமாக கர்ப்பத்திற்கும் தாய்க்கும் புஷ்டியளிக்கவும், ஜ்வரம் குறையவும் உபயோகிக்கத்தக்கது.

அதிகமாக மாதவிடாய் வெளியாவதால் அல்லது பிரதரத்தால் கர்ப்பாசயம் துர்பலமடைந்து கர்ப்பதாரணம் ஏற்படாமலும், ஏற்பட்டாலும் ஸ்ராவமாகியும் கர்ப்பம் தங்கினால் அடிக்கடி ஜ்வரம் ஏற்பட்டும், சிசு வெளியானால் எப்போதும் மெலிந்தும், நோயுற்றும் இருக்கும் வழக்கத்திலுள்ளவர்கள் இதைத் தொடர்ந்து சாப்பிட கர்ப்பாசயம் வலிவடைந்து, கர்ப்பம் நன்கு ஏற்பட்டு, ஸ்ராவமாகாமல் புஷ்டியான பிள்ளைப்பேறு உண்டாகின்றது.

மாலினீ வஸந்தம் என்ற பெயரில் கர்ப்பரம் சேராத வேறு சில முறைகள் உண்டு. அவைகளை வேறு சமயம் கவனிப்போம்.

# பார்ச்வ சூலம்

[பார்ச்வ சூலம்—ஜாதோதக நிலை என்ற தலைப்பில் ஸசித்ர ஆயுர்வேத பத்திரிகையில் ஸ்ரீமான் ரணஜித்ராய் அவர்கள் எழுதிய ஆராய்ச்சியுரையின் சுருக்கத்தை இங்கு தருகிறோம். ஆசிரியரின் ஆராய்வுத்திறனை சந்திரிகை வாசகர்கள் நன்கு அறிவார்கள். மூல கிரந்தங்களின் விவரணத்தில் இவர் கடைபிடிக்கும் தனிவழி விஷயத்தை புதிய முறையில் விளக்குவதில் நிகரற்று விளங்குகிறது—ஆசிரியர்.]

இந்தக் கட்டுரையின் ஆரம்பத்திலேயே இதில் குறிப்பிட விரும்பும் விஷயங்களின் சாரத்தைத் தொகுத்துத் தரவிரும்புகிறேன். அவையாவன.

1. ஹிருதயத்திற்கும் புப்புஸத்திற்கும் சுற்றியிருக்கும் சவ்வுகள் ச்லேஷ்மதர கலைகள் எனப்படுபவை. அவைகளின் நடுவில் உள்ள திரவம் ச்லேஷக கபம் எனப்படுவது.

2. ஆமவாதத்தில் எலும்புப் பூட்டுகளில் ஏற்படுவதைப் போல ஹிருதயத்திலும் ஏற்படும் கெடுதிகளைப் பற்றிய ஆயுர்வேத வழியிலுள்ள விவரணம்

3. காச்யப ஸம்ஹிதையில் பார்ச்வசூலத்தின் லக்ஷணமாகக் குறிப்பிட்டுள்ள சில குறிகள் டிரைப்ளூரிஸி, வெட்ப்ளூரிஸி (Dry Pleurisy and wet Pleurisy) நோய்கள் ஏற்பட்டதன் அறிகுறிகளாகும்

4. கபஜஹிருத்ரோகம் என்பது நவீனர்களின் pericarditis with effusion ஆக இருக்கலாம்.

ஒன்றுக்கொன்று தொடர்பற்று இருப்பது போன்ற இந்த விஷயங்கள் எவ்வளவு தொடர்புள்ளன என்பதை இங்கு கவனிப்போம்.

ஹிருதயத்திலும் புப்புஸத்திலுள்ள ச்லேஷ்மதராகலைகள் :— ச்லேஷ்மதரா கலைகளைப் பற்றி ஸுச்ருதர் கூறும் லக்ஷணம் பின் வருமாறு—"ஏழு கலைகளின் நான்காவது ச்லேஷ்ம (கப) தராகலா. இதில் ச்லேஷகம் எனும் கபம் இருக்கிறது ஒரு தேரின் ஆச்சில் எண்ணெய் போடுவதால் சக்கரங்கள் சரியாக உருளவும் சக்கரத்தில் ஏற்படும் அதிர்ச்சிகள் ரதத்தைப் பாதிக்காமலும் இருப்பதுபோல ஆங்காங்கு பூட்டுகளில் ச்லேஷகம் எனும் கபமுள்ள இந்த சவ்வு (கலை) பூட்டுகள் சிரமமில்லாமல் அசையவும் திடமாக இருக்கவும் உதவும்".

இப்பூட்டுள்ள எலும்புக்கும் எலும்புக்குமாகத்தான் இருக்க வேண்டுமென்று ஸுச்ருதர் கூறவில்லை. ஒரு அவயவமும்

மற்றோர் அவயமும் உரையாது தனித்து இயங்கவும் தன்னளவிலே பிரிந்து சுருங்கவும். ஒன்றுக்கொன்று இடித்துக் கொள்ளாமலு மிருக்க நடுவிலே உதவும் ஓர் சவ்வு எனப்பொருள் தான்கொள்ள வேண்டியிருக்கிறது. இந்த நோக்கில் ஹிருதயத்திற்கும் புப்பு ஸத்திற்கும் நடுவிலுள்ள Pericardium என்ற சவ்வும், புப்புஸத் திற்கும் விலா வெலும்புகளுக்கும் நடுவேயுள்ள Pleura என்ற சவ்வும் ச்லேஷ்ம தராகலை என்பதிலும் அதனுள் உள்ள திரவம் ச்லேஷககபம் என்பதிலும் ஐயமில்லை.

பூட்டுகள் (ஸந்திகள்). இந்தச் சொல்லால் எலும்புகளின் பூட்டுகளைத்தான் அதிகமாகக் கொள்வது வழக்கம், எனினும் தசைகள், தசைநார்கள், ரத்தக் குழாய்கள் முதலியவைகளின் ஸந்திகளையும் ஸந்தியெனக் குறிப்பிடுவது உண்டு இந்த நோக் கில் ஹிருதயம்-புப்புஸம்-விலா எலும்புக் கூடு இவைகள் சம்பந் தப்பட்ட சில நோய்களை இங்கு ஆராய்வோம்,

ஹிருதயம். இதற்குப் பொதுவாக ஹிருதயம் என்ற பிரதான ஆசயத்தின பொருள் எனினும், ஆயுர்வேத வியவ ஹாரத்தில் ஹிருதயத்திலிருந்தும் வெளிக்கிளம்பும் ரத்தக் குழாய் களையும் உள் வந்து சேரும் ரத்தக் குழாய்களையும் சேர்த்து ஹிருதயம் என்று கூறுவது வழக்கம. தேர் சக்கரத்தின் ஆரங் களுடன் கூடிய நடுக்குடம் போல ஹிருதயம் கேந்திரமாக இருந்து உடலைத் தாங்குகின்றது என்றுதான் ஹிருதயத்தின் விளக்கம் ஆங்காங்கு காணப்படுகின்றது. அதனுலேயே நாபி-(தொப்புள் போன்ற நடுபாகம் சக்ரத்தின் நடுக்குடம் சக்ர நாபி) என்ற பெயரும் ஹிருதயத்திற்கு வியவஹாரத்திலுள்ளது. அதனுல் ரத்தக் குழாய்களுடன் கூடிய ஹிருதயத்தையே இங்கு ஹிருதய சப்தத்தால் குறிப்பிடுகிறோம்.

ஆமம். ஆமவாதத்தைப் பற்றிக் குறிப்பிடு முன் ஆமம் என்பது என்ன என்று விவரிக்க வேண்டியது அவசியம். ஜீர் ணம் செய்யும் அக்னியின் பலக்குறைவால் பாதி பக்குவமாகவோ முழுதும் அபக்குவமாகவோ உள்ள உணவுப் பொருளை ஆமம் என்கிறோம். ஆனுல் இந்நிலை ஆமாசயத்திலும் குடலிலும் நோயை உற்பத்தி செய்ய முடியலாம். உடல் முழுதும் பரவி நோயை உற்பத்தி செய்யும் தகுதி எங்ஙனம் இதற்கு ஏற்படுகின்றது என்ற கேழ்வி எழலாம், ஏனெனில் பக்வமான உணவிலிருந்து உள் உறுஞ்சப்படும் ரஸம் ஸூக்ஷ்மமான படியால் ரஸாயனி களின் ஸூக்ஷ்ம த்வாரங்கள் வழியே உட்செல்லமுடியும். அபக் வமான உணவு அவவளவு ஸூக்ஷ்மமாயிருக்காததலால் ரஸா யனிகளின் வழியே உட்செல்லாது. ஆனுல் அதே ஆமம் புளித்து விட்டால் விஷமாக மாறி விஷத்தின் குணத்தை மேற்கொண்டு

உடல் முழுதும் பரவும். ஆனால் ஆமவாதத்தில் இவ்விதம் குடலில் புளிப்போ, விஷநிலையோ ஏற்படுவதில்லை. அதனால் ஆமவாதத்தில் குறிப்பிடப்படும் ஆமம் அபக்வமான உணவைக் குறிப்பிடுவதில்லை எனக் கொள்ளவேண்டி யிருக்கிறது. இதற்கான ஆதாரத்தை சரகர் கிரஹணி சிகித்ஸையில் வெளியிடுகிறார். ஆமம் பக்வம் என்ற நிலை மூன்று இடங்களில் உண்டாகின்றது. ஆமாசயத்திலும் பச்யமானாசயத் (சிறுகுடல்) திலும் ஏற்படுவது பக்வாசய (பெருகுடல்) த்தில் ஏற்படுவது, சரீரத்தில் ஏற்படுவது என மூன்றாகப் பிரித்துள்ளார். ரஸதாதுவாக உறுஞ்சப்பட்டு உட் சென்ற ஆகார ஸத்து, உள் ரத்தம் முதலிய தாதுக்களாக மாறுவதில் தாத்வக்னிகளின் பலக்குறைவால் தடைபட்டு அங்கு ஆமமாகத் தங்கிவிடுகின்றது. இவ்விதம் ரஸம் ஆமமாக நின்றால் ஆமாசய பக்வாசயங்களில் ஏற்படும் ஆமத்திற்கான லங்கன பாசன சிகித்ஸை செய்தாலே நல்ல பலன் தருகிறது. ஆகார ரஸத்திலிருந்து ரஸம் ரத்தம் முதலிய தாதுக்கள் ஏற்பட தாத்வக்னிகள் உதவ வேண்டியிருக்கிறது. ஆமவாதம் அம்ல பித்தம் முதலிய நோய்களில் சரீரம் முழுவதும் காணப்படும் ஆமலக்ஷணங்கள் இவ்விதம் தாத்வக்னிகளின் பலக்குறைவால் ஏற்பட்ட ஆம நிலையை காரணமாகக் கொண்டவைகளே, மாதவ நிதானத்தில் ஆமவாதத்தின் குறிகளில் ஹிருதயத்தின் பலவீனமும் பாரமும் (கௌரவமும்) கூறப்படுகின்றன. இவ்விதம் குறிப்பிடப்படும் ஹிருதயக் கெடுதியை நவீன விக்ஞானம் நன்கு விளக்குகின்றது. ஆமவாதத்தின் ஆரம்ப நிலையிலேயே ஆமம் நன்கு பக்வமடையச் செய்யும் சிகித்ஸையாக லங்கனம்—பாசனம் முதலியவைகள் செய்யும் ஆயுர்வேத வழி ஹிருதயத்தில் ஒரு கெடுதியும் ஏற்படாது பாதுகாக்கின்றது. ஹிருதயத்தில் கெடுதி ஏற்படுமளவு வியாதி முற்றி யிருந்தாலும் இந்த சிகித்ஸை முறையால் எதிர் பாராத அளவில் கெடுதிகள் மறைகின்றன. ஹிருதயத்தின் உருவமைப்பின் என்ன விதமாகக் கெடுதிகள் ஏற்படுகின்றன என்பது பற்றிய விவரணம் ஆயுர்வேதத்தில் பூர்மாணகக் குறிப்பிடப்படா விடினும், கெடுதி வரும் வகையைப் பற்றி—ஸம்பிராப்தியைப் பற்றி விவரணம் மிகவும் யுக்தி யுக்தமாகக் குறிப்பிடப்படுகின்றது.

அன்னரஸம் புளித்துப் போதல்: கிரஹணி நோயில் கிரஹணி (சிறுகுடல்) யின் சீர் கேட்டால் லகுவான உணவு கூட ஜீர்ணமாவதில்லை. ஜீர்ணமாகாத உணவு புளித்து காடியாகி விஷமாகி விடுகின்றது. Lactic Acid (மோர்காடி) Butyric Acid (வெண்ணெய் புளிப்பு) முதலிய பல காடிகள் உற்பத்தியாகின்றன. இதை விதாஹம், விதக்தாஜீர்ணம், அம்லபாகம என்றெல்லாம் குறிப்பிடுகிறோம். நவீனர்கள் இதை சுத்தபாகம் (Acid

fermentation) என்பர். இவ்விதப் புளிப்பினுல் ஏற்படும் அஜீர்ணத்தை விதக்தாஜீர்ணம் (Acid dyspepsia) என்பர். இந்தப் புளிப்பு கிரஹணியில் ஏற்படுவது. இதே புளிப்பு உள் உறுஞ்சப் பட்ட ரஸதாதுவில் ஏற்பட்டால் உடல் முழுவதும் இதன் குறிகள் காணப்படுகின்றன. அம்ல பித்தம் இவ்வகைப்பட்டது. இதன் முக்யக்குறி க்லமம் என்பது அதாவது ஒருவித வேலையின்றி ஏற்படும் களைப்பு—(Exhaustion). இந்தக் களைப்பைப் பல கரமான ஔஷதங்கள் நீக்குவதில்லை. தாதுக்களில் சேர்ந்திருக்கும் புளிப்பு காரணமாக இது ஏற்படுகின்றது. ஆமவாதத்தில் காணப்படும் ஹிருதயக் கெடுதி மற்றும் உடல் பூராவும் காணப்படும் பல குறிகள் இந்த ரஸப்புளிப்பால் ஏற்படுபவையே.

புளிப்பு மிகுதியாய் உண்பதால் பித்தமும் கபமும் அதிகமாகும் இதேமாதிரி ரஸதாதுவில் புளிப்பு மிகுந்திருக்கும் போது ஆங்கு கபமும் பித்தமும் அதிகமாகி வாயுவை ஆவரணம் செய்து ஆமவாதத்தை உண்டாக்குகின்றன. ஆமவாதம் (கீல்வாயு) முக்யமாக பூட்டுகளில் காணப்படுகின்றது பூட்டுகளில் ச்லேஷக கபம் தங்கியிருக்கின்றது அந்த இடத்தில் ஆமரஸதாது தங்கும் போது ஆங்கு நோய் உண்டாகின்றது. பித்தத்தின் மிகுதி காரணமாக ச்லேஷ்மதா கலைகளில் பாகமும் (inflammation) ச்லேஷ்ம கபத்தில் மிகுதி காரணமாக நீர் (synovial fluid) தங்குதலும், தடைபடும் வாயுவால் வலியும் ஏற்படுகின்றது. பாகம் அளவுக்கு மீறினுல் வியாதி தங்கி ஸ்திரமான கெடுதலைத் தருகின்றது.

முன் கூறியது போல ஹிருதயம் பிரதானமான கபஸ்தானமானதாய் ஆங்கும் இதே ரீதியில் ஆமவாதத்தால், வெளியிலுள்ள ச்லேஷ்மதர கலைகளிலும் ஹிருதயக் கதவுத் தசைகளிலும் கலைகளிலும் ஹிருதயத் தசைகளிலும் ஏற்படும் பாகத்தை Pericarditis, Endo carditis, Myo carditis என்று வியவஹரிக்கின்றனர். ஹிருதயத்தின் பக்கத்திலுள்ள சவ்வுகளில் ச்லேஷக கபத் திரவம் அளவில் மீறி அதிகமாகச் சுரந்து தங்குமாகுல் Pericarditis with effusion என்பர்.

வயிற்றிலுள்ள கலைகளில் ஏற்படும் பாகமும் அதில் நீர் தங்குதலும் உதரமென்றும் ஜாதோதக-(நீர்வைத்த) உதரம் என்றும் குறிப்பிடப் படுவது போல, ஹிருதய தர கலையின் பாகத்திலும் ஜாதோ தக (நீர் வைத்த) நிலை ஏற்படுவது குறிப்பிடத் தக்கது. இந்த விகாரங்கள் ரஸதாதுவின் சுத்த பாகத்தாலும் கப விருத்தியாலும் ஏற்படுபவை. இதை கபஜ ஹிருத்ரோகம் என்ற பெயரில் குறிப்பிடலாம்.

கபஜ ஹ்ருத்ரோகம் : ஹிருதய ரோகங்களில் பொதுவாக ஹிருதயத்தின் செயலில் ஏதாவது ஒருவகையில் மாறுதல் ஏற்படுகின்றது. அத்துடன் உடல் நிறம் மாறுதல், மூர்ச்சை, ஜ்வரம், இருமல், காஸம், விக்கல், ச்வாஸம், வாய் ருசி மாறுதல், நாவரட்சி, மோஹம், வாந்தி, கபம் துப்புதல் ஹிருதய ப்ரதேசதில் வலி அருசி முதலிய பொது லக்ஷணங்களும் காணும். கபஜ ஹிருதய ரோகத்தில் முக்யமாக ஹிருதயம் ஸ்தம்பித்துள்ளது போன்றும் மறத்துப் போனது போன்றும் அழுத்தப்

பட்டுள்ளது போன்றும் கல் உள் வைத்துள்ளது போன்றும் மந்தமானது போன்றும் உணர்ச்சி ஹிருதயம் கனத்துப் போதல். இவை அந்த இடத்தில் உணரப்படும் குறிகள் – அத்துடன் சோம்பல். அசதி, தூக்கம், வாய் தித்தித்திருத்தல்; வாயில் அதிகமாக ஜலம் ஊறுதல், கபம், காரித்துப்புதல், அருசி, அக்னி மாந்தம், ஜ்வரம் போன்ற மற்ற குறிகளும் காணும். இதில் சோதத்திற்கும் ஜலோதரத்திற்கும் உள்ள சிகித்ஸையும் விசேஷமாக ஸமீரபன்னக ரஸம் போன்ற உஷ்ணதீக்ஷ்ண குணமுள்ள மருந்துகளை ஸேவிப்பதும் நல்ல குணம் தருகின்றது

ஹிருதயதரகலை (சவ்வு)களில் பாகத்தையும் நீர் தேங்கும் நிலையைப்பற்றியும் யோசித்தோம் இம்மாதிரியே புப்புஸதா கலைகளில் ஏற்படும் பாகத்தைப் பார்ச்வ சூலம் (Pleurisy) எனவும் பாகத்துடன் ஜலம் தேங்கும் (ஜாதோதக) நிலைமை (wet Pleurisy) எனவும் பெயர் வழக்கத்திலுள்ளது. காச்யப ஸம்ஹிதையில் ஹிருதயத்திலும் விலாவிலும் கபம் சேர்ந்து உண்டாகும் நிலையை பார்ச்வ சூலம் என்று குறிப்பிடுகிருர்.

> கபோஹி வாயு நா க்ஷிப்தோ விஷ்டப்த : பார்ச்வ யோர்ஹ்ருதி.
> கரீக்ருதச்ச பித்தேந சல்யவத் பாததே நரம்.
>
> —காச்யப ஸம்ஹிதை

கபமானது வாயுவால் ஹிருதயத்திலும் விலாப்புறங்களிலும் அடைக்கப்பட்டு பித்தத்தால் காய்ந்து சல்யம் போன்ருகி மிகுந்த வேதனையை உண்டாக்குகின்றது. என்பதே காச்யப வசனத்தின் பொருள்.

— தொடரும்


# நியூ லக்ஷ்மீ டிஸ்பென்ஸரி

(நியூ பிருந்தாவனம் சமீபம்)

கீழ ராஜ வீதி, புதுக்கோட்டை.

குழந்தைகளுக்கும் பெரியவர்களுக்கும்
சிறந்த முறையில் வைத்யம்
செய்யப்படும்.

வைத்யர்

N. வைத்யநாதன், R. M. P.

கஸ்தூரி, குங்குமப்பூ, மற்றும் இதர
உயர்ந்த மருந்து சரக்குகளுக்கு
நம்பிக்கையான இடம்

# BHALLA BROTHERS (Regd.)

LUDHIANA (India)

**IN THE SERVICE OF AYURVEDA SINCE 1934**

**SUPPLYING PURE ARTICLES.**

ஆங்கிலம் அல்லது ஹிந்தியில் எழுதவும்

மூலிகை நாட்டு மருந்துச் சரக்குகள்
சாஸ்திரீயமான ஆயுர்வேத மருந்துகள்
இவைகளுக்கு நம்பிக்கையான இடம்

# *K. L. TALWAR & BROS.,*


**MUSK MERCHANTS,**

**P. B. No. 17, LUDHIANA.**

விலைப் பட்டியல் கேட்லாக்களுக்கு எழுதவும்.

**இம்ப்காப்ஸ்**

**புராதன பாரம்பரியத்துடன் நவீன தொழில் நுட்பமும் இணைந்து நிற்கும் நிறுவனம்.**



இம்ப்காப்ஸ் இந்திய மருத்துவர்களின் இணையில்லாத ஒரு கூட்டுறவு நிறுவனம். புராதன நூல்களில் கூறியுள்ள முறைகள், தரங்களை கண்டிப்பான முறையில் பின்பற்றி ஆயுர்வேத, சித்த, யூனானி மருந்துகளை அது தயாரித்து வருகிறது. மருந்துகளை தயாரிக்கும் ஒவ்வொரு கட்டத்திலும் அதிக கடுமையான முறையில் தரப் பரிசோதனை செய்யப்படுகிறது. புராதன மருந்துகளை தயாரிப்பதில் நவீன பாக்கிங் முறைகளையும் இயந்திரங்களையும் இம்ப்காப்ஸ் பயன்படுத்தி வருகிறது. சுதேச மூலிகைகள் பற்றிய இடைவிடாத ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ள இம்ப்காப்ஸ் புராதன இந்திய மருந்துகள் சம்பந்தமாக ஒரு மறுமலர்ச்சியை உண்டாக்கப் பாடுபடுகிறது.

Impcops

**உண்மையான ஆயுர்வேத, சித்த, யுனானி மருந்துகளுக்கு பெயர் பெற்ற நிறுவனம்**

இம்ப்காப்ஸ் மருந்துகள் எல்லா முக்கிய மருந்து கடைகளிலும் கிடைக்கும்

**இந்தியன் மெடிகல் பிராக்டிஷனர்ஸ் கோவாப்ரேடிவ் பார்மஸி அண்ட் ஸ்டோர்ஸ் லிட்.**

அடையார், சென்னை 20.

**விற்பனை நிலையங்கள்:** 4/86, மவுண்ட் ரோடு, சென்னை-2. போன்: 8652

48, தெற்கு மாசி தெரு, மதுரை. போன்: 30875

16, வெஸ்ட்காட் ரோடு, ராயப்பேட்டை, சென்னை-14.

maa/IMP/961/M TAM

வைத்ய வாசஸ்பதி

பண்டிட் P. S. ராமசர்மா அவர்களின்

நீண்டகால பரீக்ஷை அனுபவத்தினால்

கண்டுபிடிக்கப்பட்ட கைகண்ட பலனளிக்கும்

"சக்தி சஞ்ஜீவி"

(REGD.)

குழந்தைகளுடைய ஈரல் குலைகட்டிகளை

எந்நிலையிலும், போக்குவதிலும்,

வராமல் தடுப்பதிலும் நிகரற்ற ஔஷதம்

எங்கும் கிடைக்கும்.

★

தயாரிப்பவர் :

சக்தி விலாஸ வைத்தியசாலா

கரூர் (S. Ry.)

Edited and published by Dr. T. S. Iswaran, L.I.M., on behalf of the Tamilnad Ayurveda Mahamandalam at 27, Chinnakadai Street, Tiruchirapalli-2 Printed at Githa Press, Tiruchirapalli-2.